1979 ஏப்ரல் 26]

(ஈ) மண்டபம் பகுதியில் கடல் கொந்தளிப்பால் விளை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியது குறித்து.

திரு. செ. சிவசாமி : கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு விவசாயம் மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம், கடல் கொந்தளிப்பால் மண்டபம் பகுதியில் 2,000 ஏக்கர் விளை நிலங்கள் உவர் நிலங் களாக மாறியுள்ளதாலும், 100 ஏக்கர் மல்லிகை தோட்டம் அழிக்கப்பட்டுள்ளதாலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கடந்த 1978-ம் ஆண்டில் நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக இராமநாதபுரம் மாவட்டம் கரையோரப்பகுதிகளில் கடல் நீர் விளை நிலங்களில் உட்புகுந்து பயிர்களை பாழாக்கியதுடன் உட்புகுந்த கடல் நீர் வெளியேறும்போது விளைநிலங்களை உப்பு நிலங்களாக மாற்றியது. இவ்வாறு மண்டபம் பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலமும் இராசசிங்கமங்கலம் பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் நிலமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இயற்கையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விவசாயத்துறை ஊழியர்கள் பார்வையிட்டனர். வானொலி மூலமாகவும் துண்டு பிரசாரங்கள் மூலமும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் இப்பகுதி உழவர் பெருமக்கள் தங்களது நிலங்களை நன்கு உழுதுவிட்டு நிலத்தில் சற்று நேரம் நீர் கட்டி பின் உப்பினை வடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இவ்வாறாக நிலச் சீர்திருத்தம் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 500 ரூபாய் வரை செலவாகும். ஆனால், இப்பகுதி உழவர் பெருமக்கள் இத்தகைய உவர் நில சீர்திருத்த வேலைகளை மேற்கொள்ளும் நிதி வசதியற்று உள்ளனர். இருப்பினும் அவர்கள் தங்கள் நிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 2,000 வீதம் தொகையாக முழு மான்யம் வழங்கினால் சீர்திருத்த வேலைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற சீர்திருத்தங்கள் பற்றி தமிழக அரசும் வெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு வந்திருந்த இந்திய அரசுக் குழுவும் ஆய்வு செய்ததில் இப்பகுதி நிலங்கள் ஏற்கனவே வளமிழந்த நிலங்கள் என்றும் பொதுவாக ஏக்கருக்கு ரூபாய் 1,000/- முதல் ரூபாய் 2,000,- வரை மதிப்புள்ளதென்றும் எனவே மேற்கூறப்பட்ட மிகவும் நுட்பமான சீர்திருத்தப்

பணிகளை மேற்கொள்வது அவ்வளவாக பயனளிப்பதாகாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இப்பகுதி மக்கள் மேற்சொன்ன திட்டப் பணிகளுக்காகும் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் வகையில்லாதவர்கள். எனவே இப்பகுதி உழவர்கள் தமது வழக்கமான முறைகளை மேற்கொள்ளுவதே நல்லதொரு வழியாகும் என்று கருதப்படுகிறது. இதன்படி இப்பகுதிகளில் கிடைக்கும் கண்மாய் வண்டல்களை பரப்பியும் தண்ணீரை நிறுத்தி வைத்தும் குறைந்த செலவில் உப்பினை வடிகட்டி விடலாம். இவ்வழியே சிறந்த வழியாகும்.

1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயலினால் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல்நீர் பாய்ந்ததனால் மல்லிகைத் தோட்டங்கள் பாதிக்கப்படவில்லை. ஆனால் புயலை ஒட்டி ஏற்பட்ட பெருமழையினால் மண்டபம் பகுதியில் இராமேஸ்வரம் தீவில் சில நிலங்களில் மழைநீர் தேங்கி இருந்ததால் மல்லிகைப் பயிர்கள் சிறிது தற்காலிகமாக பாதிக்கப்பட்டன. ஆனால் நீர் வடிந்த பின்பு மல்லிகைப் பயிர்கள் மீண்டும் புத்துயிர் பெற்று விட்டன. தற்போது இப்பயிர்கள் நல்ல நிலைமையில் உள்ளன. மல்லிகைப் பயிருக்கு எவ்வித சேதமும் இல்லை.

(முற்பகல் 11·20)

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் இரண்டாயிரம் ஏக்கர் விளை நிலங்கள், 100 ஏக்கர் மல்லிகைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டார்கள். நன்றி. விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கும் முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் துண்டு பிரசுரங்கள் மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற முறையில் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை சரியல்ல. துப்பாக்கியால்தான் நிவாரணம் கொடுப்போம் வேறு நிவாரணம் கொடுக்கமாட்டோம் என்ற நிலையில் போகாமல் அந்த உப்புத் தண்ணீரை வடித்து கரம்பை நீக்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே என்னுடைய பதிலிலேயே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள நிலங்கள் வளமிழந்த நிலங்கள். அதற்கு இரண்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்வது சரியாக இருக்காது என்று விவசாயத் துறை மூலமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் துப்பாக்கிக் கொண்டு ஆட்சி நடத்தவேண்டிய துர்ப்பாக்கியம் எங்களைப் பொறுத்தவரையில் எழக்கூடாது என்பதுதான் இந்த அரசின் தலையாய கொள்கை.

1979 ஏப்ரல் 26] [திரு. ப. குழந்தைவேலு]

நான் பணிவோடு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் எங்கெங்கு மக்கள் அவதிப்படுகிறார்களோ, எங்கெங்கு மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்களோ அவர்களுடைய பாதிப்பை நீக்குவதற்காக இந்த அரசு விரைந்து பாடுபட்டு வருகிறது. மல்லிகைத் தோட்டங்கள் அழிக்கப்படவில்லை, மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கின்றன என்று நமக்குக் கொடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கு எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை எடுத்துச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி: 100 ஏக்கர் மல்லிகைத் தோட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கலெக்டர் மூலமாக அரசுக்கு ரிப்போர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கேட்கிறேன், அந்த விவசாயிகளுக்கு வேறு எந்த விதமான வருமானமும் கிடையாது. அரசு அவர்களைக் கைதூக்கும் முறையில் நிச்சயமாக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும், அவர்கள் வளமிழந்த வயல்களுக்கு லோன் கொடுக்க முடியாது. லோனைத் திரும்பக் கட்ட முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் லோன் கொடுக்கமாட்டோம் என்று சொல்லுகிற அளவுக்கு அரசு கருமித்தனமாக நடந்து கொள்கிறது என்று கூறி இந்த முறை தவறான முறை. இதை மாற்றி அந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் ஆத்திரப்பட்டு வார்த்தைகளை சொல்லுகிறார்கள். ஆனாலும் நான் அவரை மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய நிலங்கள் உப்புத் தன்மை வாய்ந்த நிலங்களாக இருக்கும் காரணத்தால் மீண்டும் லோன் கொடுத்து சரி செய்வது, இரண்டாயிரம் ரூபாய் செலவழித்து ரூ 500 பெறுமான நிலத்தைச் சீர்படுத்த வேண்டுமா என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய நிலைமை. அங்கிருக்கக்கூடிய பகுதி மக்கள் இரண்டாயிரம் ரூபாய் அவர்களுக்கு லோன் கொடுத்தால் அவர்கள் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறதே தவிர, கொடுக்க முடியாது அல்லது கொடுக்கக் கூடாது என்பது இந்த அரசின் கருத்து அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.